

திராவிட இயக்க சிந்தனையுடைய பேராசிரியர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் விதமாக நடைபெற்ற 'திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின்' தொடக்க விழாவில் நேற்று பங்கேற்று திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க இலட்சினையை (logo) கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். மாநிலங்களின் கல்வி உரிமையை அபகரித்து நாடெங்கும் கல்வியை காவிமயமாக்கத் துடிக்கும் பாசிஸ்டுகளின் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் பணிகள் அமையட்டும் என்றும் வாழ்த்தினார்.

தயாநிதி மாறன் எம்.பி. – மேயர் ஆர்.பிரியா முன்னிலையில்

# சென்னை கிழக்கு மாவட்டம்: 6 சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் 1400 பேருக்கு நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை, அக்.27-

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மேயர் பிரியாராஜன் முன்னிலையில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளின் பாகநிலை முகவர்கள் (BLA2) 1400 நபர்களுக்கு சிறப்பு செய்யும் விழா நடைபெறுகிறது. இதில் அமைச்சர் - மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு, சென்னை, பாரிமுனை, அரண்மனைக்காரத் தெருவில் உள்ள பின்னிமில் கார்பார்க்கிங் வளாகத்தில் இன்று (27.10.2024, ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணி அளவில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சென்னை மாநகர மேயர். பிரியாராஜன் ஆகியோர் முன்னிலையில், சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு. வி.க.நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளின் பாக நிலை முகவர்கள் (BLA2) 1400 நபர்களுக்கு, சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் புத்தாடைகள் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் டாக்டர். கலாநிதி வீராசாமி. எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி. எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல். எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன். எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், பி.கே .மூர்த்தி. எம்.சி, கே.சந்துரு, கே.எஸ். எம். நாதன், எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்: கே.எஸ். ரவிச்சந்திரன், எஸ். மணிமுடி, சங்கரி நாராயணன். மாநில நிர்வாகிகள்: தமிழன் பிரசன்னா, .உமாகாந்த், என்.பி.எம் . ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, எம்.சி., கவிஞர் நன்மாறன், வரதன், மண்டலகுழு தலைவர் (ம) நிலைக் குழு தலைவர்கள்: ப.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ் குமார்,எம்.சி, கூ.பி. ஜெயின்.எம்.சி, ஜி.சாந்தகுமாரி, எம்.சி, சொ.வேலு. எம்.சி, மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன்.எம். சி. இசட்.ஆசாத். எம்.சி.

சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்கள்: வழக்கறிஞர் இரா. விடுதலை கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர், இரா. நரேந்திரன் - துறைமுகம் தொகுதி பொறுப்பாளர், ஓ.ஏ.நாகலிங்கம் - வில்லிவாக்கம் தொகுதி பொறுப்பாளர், டாக்டர் ப.மீ. யாழினி - எழும்பூர் தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி- திரு.வி.க.நகர் தொகுதி பொறுப்பாளர், பி.முனியாண்டி - அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர்.

பகுதி செயலாளர்கள்:எஸ்.ராஜசேகர்,எஸ். முரளி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன். எம்.சி., D.S.P.ராஜகோபால். எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வே.வாசு, வி.சுதாகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ். பன்னீர்செல்வம், கோ. மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே. துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், பி. உதயசங்கர், வி. ரமேஷ் (எ) நீலகண்டன். எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர். ஏ.பி. பூர்ணிமா, எம்.சி. இரா.கலைச்செல்வி, டி.போஸ். மாவட்டஅணிகளின் அமைப்பாளர்கள்: டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பி.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், க.வினோத், ஜி.ஜெ. பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன்,எம்.சி, நா. துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், எம். பெரோஸ்கான், LPF. மோகன், பி.விஜயகுமார், M.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர், எம்.சி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் எம்.சி., ஆர்.எஸ்.சித்திக், இரா.வீரமணி, கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், ஜி. பி.பிரதீப்குமார், ம.அசோக் குமார் மற்றும் வட்டகழச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

தருமபுரியில் அரசு பள்ளிக்கு தனது சொந்த நிலத்தை தானமாக வழங்கி 18 ஆண்டுகளாக

# வீட்டு மனை இல்லாமல் இருந்த விவசாயி முருகேசனுக்கு வீட்டுமனைப் பட்டா!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினர்!

தருமபுரி, அக்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைகளின்படி தருமபுரி மாவட்டத்தில் அரசினர் மேல்நிலைப்பள்ளி கட்டடம் கட்டுவதற்கு சொந்த நிலத்தை தானமாக வழங்கி, 18 ஆண்டுகளாக வீட்டுமனை இல்லாமல் இருந்த விவசாயி முருகேசன் அவர்களுக்கு குடியிருக்க வீட்டுமனைப் பட்டாவினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு வழங்கினார்.

தருமபுரி மாவட்டம் பொம்மிடி அடுத்த ஊராட்சி ஜாலிப்புதூரில் அரசு மேல்நிலைப் பள்ளி அமைவதற்காக 2006-ஆம் ஆண்டில் 80 சென்ட் விவசாய நிலத்தைத் தானமாக வழங்கியவர் விவசாயி முருகேசன்.

தான் சொந்த நிலத்தை பள்ளிக்கூடம் கட்டுவதற்குத் தானமாக வழங்கிய பின் குடியிருக்க வீடின்றி இருந்த விவசாயி முருகேசன் அவர்கள், ரேகடஹள்ளி கிராமத்தில் இயங்கி வரும் அகரம் மருத்துவமனையில் இரவு காவலராக பணி செய்து கொண்டு அங்கேயே தங்கி வசித்து வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு முருகேசன் குடியிருப்பதற்கு வீட்டு மனை இல்லை என்ற தகவல் வரப்பெற்றதைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, அவருக்கு பேரூராட்சிகளின் துறை சார்பில் தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ரேகடஹள்ளி கிராமத்தில் குடியிருப்பு வீட்டு மனை ஒதுக்கீடு செய்து அதற்குரிய பட்டா வழங்கிச் சிறப்பித்தார்.

வீட்டுமனைப் பட்டாவை பெற்றுக் கொண்ட விவசாயி முருகேசன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி.கி. சாந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

பசும்பொன் தேவர் திருமகனார் குருபூஜைக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருதுநகர் வடக்கு மாவட்டம் சார்பில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், அக்.27-

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தங்கம் தென்னரசு மாவட்டக் கழகத்தினருக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தனபதியார் அவர்கள் வருகின்ற 30-10-2024 - காலை பசும்பொன் தேவர் திருமகனார் குருபூஜைக்கு வருகை தருவதையொட்டி, காலை 10.00 மணியளவில் திருச்சுழி ஒன்றியம், க.விலக்கில் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளைக்கழகச் செயலாளர்கள்/பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் எரிசக்தித் துறை சார்பாக நடைபெற்று வரும்

# மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்!

## ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் – அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்!

சென்னை, அக்.27-

ஒன்றிய அரசின் மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி ஆகியோர் தலைமையில் தமிழ்நாட்டில் எரிசக்தி துறை சார்பாக நடைபெற்று வரும் மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து கலந்தாய்வு நடைபெற்றது.

ஒன்றிய அரசின் மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி ஆகியோர் தலைமையில் தமிழ்நாட்டில் எரிசக்தித்துறை சார்பாக நடைபெற்று வரும் மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து கலந்தாய்வுக்கூட்டம் சென்னையில் நேற்று (26.10.2024) நடைபெற்றது.

தமிழ்நாட்டில் தற்போது பணிகள் நடைபெற்று வரும் அனல் மின் திட்டங்களான 1X800 மெ. வா., வடசென்னை அனல் மின் திட்டம் - III (மூன்றாம் நிலை), 2X660 மெ. வா., உடன்குடி அனல் மின் திட்டம் முதல் நிலை, 2X660 மெ. வா. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல திட்டம், 1X600 மெ. வா. எண்ணூர் மிக உய்ய விரிவாக்க மின் திட்டம் ஆகிய அனல் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணிகள் குறித்து விரிவாக மாண்புமிகு அமைச்சர்கள் ஆலோசனை செய்தனர்.

மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத் திட்டத்தின் கீழ், மின் இழப்பைக் குறைப்பதற்காக 8,932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இப்பணிகளை விரைந்து முடிக்க தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய மாநில அலுவலர்களை அமைச்சர்கள் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தமிழ்நாடு எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார் மற்றும் ஒன்றிய, மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் ஒன்றிய மின்சாரம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் , மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் ஒன்றிய மற்றும் மாநில மின்சாரத் துறை உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டனர். இக்கூட்டத்தில் எரிசக்தித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் பகிர்மானம், மின் உற்பத்தி, பசுமை எரிசக்தி மற்றும் மின் தொடரமைப்புக் கழக தலைவர் க. நந்த குமார், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், ஒன்றிய மின்சாரத் துறை இணை செயலாளர் ஷஷாங் மிஸ்ரா, மாநில மின்சாரத் துறை இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஏ1 தொழில் நுட்பப் பயிற்சி வழங்க முன்வந்துள்ள

# பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடல்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டார்!

சென்னை, அக். 27 -

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பிரான்ஸ் நாட்டின் Dassault Systems நிறுவனத்தின் தலைமையகத்திற்கு சென்று கல்விச் சார்ந்த உரையாடலில் கலந்துகொண்டார்.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் TANCAM வழியாக Dassault Systems இது வரை 20000 மாணவ, மாணவிகளுக்கு உயர் தொழில் நுட்ப பயிற்சி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் TATA நிறுவனத்துடன் இணைந்து 71 தொழிற்கல்வி நிறுவனங்களின் மாணவ, மாணவிகளுக்கும் பயிற்சி வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் அவர்களின் பிரான்ஸ் நாட்டிலும் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கி வருகின்றது.

'கனவு ஆசிரியர்' விருது பெற்ற ஆசிரியர்களுடன் பிரான்ஸ் நாட்டில் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு வருகின்றார் அமைச்சர் அன்பில் மகேஸ். இதனை அறிந்த Dassault Systems நிறுவனம் தங்கள் தலைமையகம் வருமாறு அமைச்சருக்கு அழைப்பு விடுத்தது. தொடர்ந்து Dassault Systems நிறுவனத்தின் தலைமையகம் சென்ற அமைச்சர் அந்நிறுவனத்தின் 2040ஆம் ஆண்டிற்கான இலக்குகளை விவரிக்கும் காட்சிப் படங்களைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து அந்நிறுவன அதிகாரிகளுடன் கல்விச் சார்ந்த கலந்துரையாடலிலும் கலந்துகொண்டார். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பள்ளிக் கல்வித் தொடர்பான திட்டங்கள் குறித்து அந்நிறுவனத்தாரிடம் எடுத்துரைத்தார்.

'தமிழ்நாட்டில் அதிகளவிலான அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி வழங்க காத்திருக்கிறோம்' எனும் விருப்பத்தை அப்போது தெரி வித்துள்ளா ர்கள். இதனை தமிழ்நாட்டின் முதலமைச்சரிடம் எடுத்துரைத்து செயல்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலேயே முதன் முறையாக AI தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளை அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு மைக்ரோசாப்ட் நிறுவ னத்துடன் மேற்கொண்டுள்ளது. அந்த வரிசையில் தற்போது Dassault Systems நிறுவனமும் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி வழங்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது!

இந்நிகழ்வின் போது தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நரேஷ், இணை இயக்குநர் முனைவர் இராஜேந்திரன் மற்றும் Dessault நிறுவனத்தின் Valerie Ferret, .Thierry Chevrot, Dominique Anderson ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பிரான்ஸ் நாட்டின் Dassault Systems நிறுவனத்தின் தலைமையகத்திற்குச் சென்று கல்விச் சார்ந்த உரையாடலில் கலந்துகொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பள்ளிக் கல்வித் தொடர்பான திட்டங்கள் குறித்து அந்நிறுவனத்தாரிடம் எடுத்துரைத்தார். இந்நிகழ்வின் போது தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நரேஷ், இணை இயக்குநர் முனைவர் இராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.